

சாத்தனூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரினால் தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக கடலூர் மாவட்டத்தில் ,கடலூர் மாநகரம் மற்றும்கடலூர் ஒன்றிய பகுதி களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் மீட்பு, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் நிவாரண உதவிகள் வழங்கிட வேண்டி,கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் ,கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ,கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு. க செயலாளர் எம் .ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் கடலூர் மாநகர தி.மு.க அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடலூர்சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் , கடலூர் கிழக்கு மாவட்டமாதி.மு.க பொருளாளர் , எம் .ஆர் கே .பி கதிரவன், கடலூர்மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜாஅவர்கள் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் ,மாநகர ஒன்றிய, நகர ,பகுதி, பேரூர் கழகசெயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக சார்பில்அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் கூட்டத்தில். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகள் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.




பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி கழகச் செயலாளர் பெருங்களத்தூர் எஸ்.சேகர் எம்.சி. தலைமையில் 50 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடியை காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் ஏற்றி வைத்து ஏழை எளியோருக்கு நல உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் படப்பை ஆ.மனோகரன், லயன் ஆர்.எஸ்.சங்கர், பி.புகழேந்தி, எஸ்.ஐசக், பி.வெங்கடேசன், ஆர்.மஞ்சுநாத், பி.சுரேஷ், கே.சுந்தர், இளைஞர் அணி ஆர்.ரேமாண், குமரன், ஓம்பிரகாஷ் மற்றும் ஏராளமான கழக முன்னணியினர், தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களில் 900 களப்பணியாளர்கள்

# மின் இணைப்பு சீரமைப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்!

## சீரமைப்புப் பணியைப் பார்வையிட்டு அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்!

செஞ்சி, டிச 5-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பெஞ்சல் புயலால் மின்கம்பங்கள் சேதாரம் அடைந்தன. மேலும் இதனால் செஞ்சி நகரம் உள்ளிட்ட ஊரக பகுதிகளில் மின்தடை ஏற்பட்டுள்ளது.

இதை அடுத்துசெஞ்சி பேரூராட்சி சிறு கடம்பூர் சாவடி தெரு,புனிதமிக்கில் மேல்நிலைப்பள்ளி வளாகம் அருகில் மின்தடை ஏற்பட்டுள்ள பகுதிகளையும் மின் கம்பங்கள் சீரமைக்கும் இடங்களை மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி நேரில் சென்று பார்வையிட்டார் மேலும் களப்பணியில் ஈடுபட்டுள்ள மின்சாரத் துறை ஊழியர்களை சந்தித்தஅமைச்சர் செந்தில் பாலாஜிமின் தடைப்பட்ட பகுதிகளில் பணியாளர்கள் துரிதமாக செயல்பட்டு மின் இணைப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் செந்தில் பாலாஜி:

பெஞ்சல் புயல் மழையால் விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பாதிப்புகள் உருவாகியுள்ளன குறிப்பாக மின்கம்பங்கள் காற்று மழையால் சாய்ந்துள்ளன. இதனால் வீடுகளுக்கு வழங்கப்படும் மின் இ ணை ப் பு துண்டிக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் படி புயல் மழையால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்டத்திற்கு நேரில் சென்றுமின் தடை ஏற்பட்டுள்ள பகுதிகளில் விரைந்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் 7 லட்சத்து 56 ஆயிரம் மின் இணைப்புகள் உள்ளன இதில் 24000 மின் இணைப்புகள் மட்டும் மின் இணைப்பு வழங்காமல் உள்ளது.

மேலும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 900 மின்கள பணியாளர்கள் மின் துறையால் பாதிக்கப்படு இடங்களில் தீவிர களப் பணி ஆற்றி வருகின்றனர்.

முதலமைச்சரின் துரித நடவடிக்கையால் கடந்த இரண்டு நாட்களில் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேல்மலையனூர் தாலுகா கூடுவாபுண்டியில் புதிய மின் நிலையம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

முதல் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று கூடுவாமுடியில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

ஆய்வின் போது செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் நந்தகுமார், தமிழ்நாடு மின்சாரத் துறை இயக்குனர் மஸ்கர்னஸ், ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் சமுதாய குமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### கடந்த 5 ஆண்டுகளில்

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு எந்த நிதியும் ஒதுக்கவில்லை!

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச. 5 -

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டு அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு ஒன்றிய அரசு எந்த நிதியும் ஒதுக்கவில்லை என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில் அளித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் TNSTCக்கு எந்த நிதியுதவியும் அளிக்கவில்லை என, திமுக எம்.பி. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்காரி பதிலளித்துள்ளார்.



தேசிய எலக்ட்ரிக் பஸ் திட்டம் (NEBP) தொடர்பாக திமுக எம்.பி. ஆர்.கிரிராஜன் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பி இருந்தார். 50,000 மின்சார வாகனங்களைப் பயன்படுத்த கன்வெர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீசஸ் லிமிடெட் (CESL) அமைப்பை ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளதா, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மின்சாரப் பேருந்துகளின் விவரங்கள் குறித்த கிரிராஜனின் கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர் நிதின் கட்காரி, 13.05.2022ல் நிதி ஆயோக் கடிதத்தின் படி அந்த பணியை முடிக்க CESLக்கு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதற்கான பதிலில் மின்சார வாகனங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக PM eBus சேவா மற்றும் PM eDrive போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும், மாநில போக்குவரத்து கழகங்கள் இந்த உதவிக்காக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் அல்லது கனரக தொழில்கள் அமைச்சகத்திற்கு முன்மொழிவுகளை அனுப்பலாம் என கூறப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு" ஒன்றிய அரசு நிதி உதவி ஏதும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா என்ற கேள்விக்கு, TNSTCக்கு கடந்த 5 ஆண்டுகளில் நிதியுதவியாக எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை எனவும் நிதின் கட்காரி பதிலளித்துள்ளார்.

நாடு முழுவதும் அரசு, தனியார் மற்றும் கல்வி நிறுவனங்களால் 10677 மின்சார பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் ஒன்றிய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அள்ளிக் கொடுக்கும் ஒன்றிய அரசு

# எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் - பேரிடர்களுக்கு உதவும் எண்ணமே வருவதில்லை !

## 'தீக்கதிர்' நாளேட்டில் குற்றச்சாட்டு!

சென்னை, டிச. 5 -

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு நிதியை அள்ளிக் கொடுக்கும் ஒன்றிய அரசு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலத்தில் பேரிடர்களுக்கு உதவும் எண்ணம் வருவதில்லை" என்று தீக்கதிர் நாளேட்டில் குற்றம்சாட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு;

பெஞ்சால் புயல் மழை காரணமாக விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 12 உயிர்கள் பலியாகியுள்ளன. இதர உயிர்ச்சேதம், பயிர்ச் சேதம் கணக்கெடுப்பின் முதல் கட்ட தகவல்கள் அடிப்படையில் தமிழக முதல்வர், உடனடி நிவாரணப் பணிகளுக்காக ரூ.2 ஆயிரம் கோடி கேட்டு ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். மத்தியக் குழுவையும் உடனடியாக அனுப்பி சேதமதிப்பிடலை கணக்கிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். பிரதமர் மோடி முதல்வரிடம் பேசி, உதவுவதாக கூறியிருக்கிறார் என்ற தகவலும் கிட்டியுள்ளது.

இதற்கிடையில் உயிரிழப்புக்கு ரூ.5 லட்சமும், குடிசை இழப்புக்கு ரூ.10 ஆயிரமும் இறவை பாசனப் பயிருக்கு ஹெக்டேருக்கு ரூ.17 ஆயிரமும் மானாவாரிக்கு ரூ.8.5 ஆயிரமும் கால்நடைகளு க்கு ரூ.37.5 ஆயிரமும் ஆட்டுக்கு ரூ.4 ஆயிரமும் கோழிக்கு ரூ.100ம் இழப்பீடு வழங்கவுள்ள தாக முதல்வர் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் செவ்வாயன்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

ஆயினும் இந்த இழப்பீடு போதாது என்பது ஒரு புறமிருக்க, இவற்றை வழங்குவதற்கு ஒன்றிய அரசின் பேரிடர் நிதியிலிருந்து உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு விரைவான நடவடிக்கை வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆயினும் கடந்த ஆண்டு தென் மாவட்டங்க ளிலும் சென்னையிலும் ஏற்பட்ட புயல் பாதிப்புக்கு ஒன்றிய அரசு கிள்ளிக் கொடுத்து தமிழக மக்களுக்கு துரோகம் இழைத்துவிட்டது.

பொதுவாகவே எதிர்க்கட்சிகள் ஆளுகிற மாநி லங்களில் ஏற்படும் பேரிடர்களுக்கு உதவுகிற எண்ணமே ஒன்றிய அரசுக்கு வருவதில்லை. பேரிடர் என்று அறிவிப்பதற்குக் கூட அதற்கு மனமில்லை. மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே நடக்கிறது. ஆனால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் என்றால் அள்ளிக் கொடுக்கிறது. ஆபத்துக்கு உதவாத, கடும் பாதிப்புக்கு உதவாத பாஜகவின் ஒன்றிய அரசு அண்மையில் கேரளத்தின் வயநாடு நிலச்சரிவு பாதிப்புக்குக் கூட எந்த உதவியும் செய்யாத நிலையே தொடர்ந்தது. என்றாலும் இந்த முறையாவது தமிழகத்தின் வட மாவட்டங்கள் தண்ணீரில் தத்தளிக்கும் நிலையில் நெஞ்சில் கொஞ்சம் ஈரத்துடன் நடந்து தேசியப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து உடனடி நிவாரணத்துக்காக தமிழக அரசு கேட்டுள்ள தொகையை வழங்கினால் உதவிகரமாக இருக்கும்.



தீக்கதிர்

2024 டிச.04 புதன்கிழமை

அல்லலுறும் மக்களின் கண்ணீரைத் துடைத்திட...

பெஞ்சால் புயல் மழை காரணமாக விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 12 உயிர்கள் பலியாகியுள்ளன. இதர உயிர்ச்சேதம், பயிர்ச் சேதம் கணக்கெடுப்பின் முதல் கட்ட தகவல்கள் அடிப்படையில் தமிழக முதல்வர், உடனடி நிவாரணப் பணிகளுக்காக ரூ2 ஆயிரம் கோடி கேட்டு ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். மத்தியக் குழுவையும் உடனடியாக அனுப்பி சேத மதிப்பிடலை கணக்கிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். பிரதமர் மோடி முதல்வரிடம் பேசி, உதவுவதாக கூறியிருக்கிறார் என்ற தகவலும் கிட்டியுள்ளது.

இதற்கிடையில் உயிரிழப்புக்கு ரூ5 லட்சமும், குடிசை இழப்புக்கு ரூ10 ஆயிரமும் இறவை பாச...

ஒன்றிய அரசு மத்தியக் குழுவை அனுப்புவ தும் மாநில அரசு கேட்ட நிதியை உடனடியாக வழங்குவதுமே காலத்தே செய்யும் உதவியாகும். அல்லல் படும் மக்களின் கண்ணீரைத் துடைப்பதே ஆட்சியாளர்க்கு அழகு. ஈரநெஞ்சத்துடன் செயல்பட வேண்டும் என்பதே ஒன்றிய அரசிடம் தமிழக மக்களின் எதிர்பார்ப்பு. அதை நிறை வேற்றுவது அதன் கடமை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மதுரை சேவியர் – ராமமூர்த்தி – தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்புரை!

# சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம்!

## எம்.பிரவீன் தலைமை! பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் முன்னிலை! அரவிந்த் ரமேஷ் – ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா பங்கேற்பு

சென்னை, டிச. 5 -

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாள் பொதுக்கூட்டம் இன்று (5.12.2024 - வியாழன்) மாலை 6 மணிக்கு பெருங்குடி திருவள்ளுவர் நகர் பிரதான சாலையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.பிரவீன் தலைமையில் நடைபெற்றது. நடைபெறுகிறது.

சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் முன்னிலை வகித்துப் பேசுகிறார். ஆ.தேவராஜன், எஸ். ஜெகன்நாதன், சி.சிங்கமுத்து , வீர.பக்தா, மைக்ஆறுமுகம், உஷாபூபாலன், ஆர்.குமார், ஏ.அண்ணாமலை,

ஜெ.சரவணன், குட்டி(எ) ராஜேந்திரன், டி.குமார், எஸ். சீனிவாசன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலர் மா.சுப்பிரமணியன், கழகப் பேச்சாளர்கள் மதுரை சேவியர், ராமமூர்த்தி, ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ., எம்.எல்.ஏ.க்கள் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, காரம்பாக்கம் க. கணபதி, துணைமேயர் மு. மகேஷ்குமார், தொகுதி பார்வையாளர் நா.சந்திரபாபு, பாலவாக்கம் க.சோமு, மாவட்ட நிர்வாகிகள் எஸ். குணசேகரன், த.விஸ்வ நாதன், ப.மு.மனோகரன், வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன். வி.இ.மதியழகன், ஜி. வெங்க டேசன், எஸ்.சங்கீதா பாரதிராஜன், எம்.கே.ஏழுமலை, ம.ப.ரவி, ஏ.அரிகிருஷ்ணன், தா.பஷீர், சி.பிரதீப், ரத்னாலோகேஸ்வரன், கா.வீ.தியாகராஜன், ஜே.இ. சிராஜ், மாதவன் பாலாஜி உள்ளிட்டோர முன்னிலை வகித்தனர்.

பாண்டியன், பா. அருண்குமார், வி.எட்டியப்பன் ,எம். பார்த்திபன், என்.அனிஷ், த.விஜயபாலன், கி.ஸ்டாலின் மொழி,

பகுதிச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், மு.ராஜா, துரை கபிலன், அரியா சு.சேகர், வே.ராஜன் , கே.கண்ணன் மற்றும் மா.அன்பரசன், ச.சம்பத்ம்,.ஸ்ரீதரன், உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், வி.கனிமொழி, ஆர்.பாலசுந்தரம், கந்தப்பன், பி.எஸ்.முருகேசன், பி.ஜே.பாஸ்கர், வ.செல்வகுமார், துரை வீரமணி, எம். விநாயகமூர்த்தி, ச. சங்கர்கணேஷ் ,ஆர்.கிருஷ்ணகுமார், ச.ரவி , எஸ்.பிரகாஷ், வே. ஆனந்தம், சாதிக் கனிமொழி தனசேகரன், நா.மணிக ண்டன், சசிகுமார், கோ.பாஸ்கர், ஜெகதீசன், குமரேசன், சி.பரிமேலழகர், வி.ராஜேஷ், முகேஷ்கண்ணா, அரிபாபு, நிஷா ,ராமன், சி.சுரேஷ், பு.த.ரமேஷ், எம்.அருள் , எம். பி.அரிகிருஷ்ணன், வி.வெங்கடேசன், சே.சிந்தன், ஆ.திலகவதி, க.ரவீந்திரகுமார், எம். டேவிட் சௌந்தர்ராஜன், ஜே.கே.மணிகண்டன், எம். கே.ஜெய், ஜெ.திவாகர், ஆர். குமாரசுவாமி, ஜி.சுரேஷ், ம.ஆறுமுகம், வி.ரஞ்சித்குமார், வ.பாபு, ஷெர்லிதாமஸ் ஜெய், சர்மிளாதேவி திவாகர், தமிழரசிசோமு , , க. ஏகாம்பரம், ஜி.சங்கர், அ. முருகேசன், விமலா கர்ணா, மாவட்ட கழக பிரதிநிதிகள் கே.பாலகிருஷ்ணன், செல்வம், இரா.ராஜேஷ்குமார் , எஸ்.கோவிந்தன், ஜி.ஆறுமுகம், ஆர்.ராமமூர்த்தி, பி.எம். செல்வவிநாயகம் (அப்பு எம். கே.ராமகிருஷ்ணன், க.ராமமூர்த்தி, தே.ஜம்புலிங்கம், ஏ.விநாயகம் , சண்.கருணாநிதி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

# திருமழிசை பேரூராட்சி மன்ற கூட்டம்!

## ஜெ.மகாதேவன் தலைமையில் !

திருவள்ளூர், டிச.5:

திருமழிசை பேரூராட்சி மன்ற கூட்டம் பேரூராட்சித் தலைவர் (ஜெ.மகாதேவன் ) தலைமையில் நடைபெற்றது. செயல் அலுவலர் ம.வெங்கடேஷ் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கவுன்சிலர்கள் பிரியா சுரேஷ், மஞ்சுளா பாஸ்கர், விஜயலட்சுமி வேலு, கஸ்தூரி அருள், வீ.வேணுகோபால், ஜீவா சதீஷ், லதா ஜோதி, அனிதா சங்கர், ஆர்.ராஜேஷ், ட்டி.எம்.ரமேஷ், ஜெயசுதா வேணுகோபால், ஆர்.பிரதீப், சி.வேலு ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் திருமழிசை பேரூராட்சிக்குட்பட்ட மேட்டுதாங்கல் பகுதியில் உள்ள மைதானத்தில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை முழுவதுமாக அகற்றப்பட்டு விட்டது. தற்போது காலியாக உள்ள இடத்தை யாரும் ஆக்கிரமிப்பு செய்யாத அளவிற்கு விளையாட்டு மைதானம் ஏற்படுத்துவதென்றும், பேரூராட்சிக்குட்பட்ட திருமழிசை திருவள்ளூர் நெடுஞ்சாலையில் சென்னை பப்ளிக் பள்ளி எதிரில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு, மேலும் ஆக்கிரமிப்புகளை தடுக்கும் வகையில் சிறுவர் பூங்கா மற்றும் இளைஞர்களுக்கான உடற்பயிற்சி கூடத்துடன் விளையாட்டு மைதானம் அமைப்பது என்றும். மேலும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான போக்குவரத்துக்கு இடையூறாக சாலையில் சுற்றி தெரியும் மாடுகள் பிடித்து அதன் உரிமையாளர்களுக்கு ரூ. 2 ஆயிரம் அபராதம் விதிப்பதுடன், அதன் பராமரிப்பு செலவுக்காக நாள் ஒன்றுக்கு உரிமையாளரிடம் ரூ. 500 வசூலிப்பது என்றும், விரைவில் அதற்கான அறிவிப்பை முறையாக அறிவித்துவிட்டு நடைமுறைப்படுத்துவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மேலும் மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் தானியங்கி குளோரின் கலக்க நடவடிக்கை எடுப்பது, தற்போது ரூ.65 லட்சம் மதிப்பில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற பணிகள் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது

### விளையாட்டு மேம்பாட்டு அணி ஒன்றிய அமைப்பாளர் ஹரிஹரசுதன்தேவா ஏற்பாட்டில்

# திருவாரூரில் துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழா இறகு பந்து போட்டிகள்!

## பூண்டி. கலைவாணன் தொடங்கி வைத்தார்.

திருவாரூர்,டிச05.

திருவாரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, சிறப்பு இறகுப் பந்து போட்டிகளை பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

திருவாரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் ,கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவு விழா, இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா ஆகியவற்றை முன்னிட்டு திருவாரூரில் பிரமாண்ட இறகுப்பந்து போட்டிகள் நடைபெற்றது.

திருவாரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் ஹரிஹரசுதன் தேவா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போட்டிகளை மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம். எல்.ஏ. தொடங்கி வைத்தார். ஒன்றிய கழக செயலாளர் புலிவலம் ஏ. தேவா, நகர கழக செயலாளர் வாரை. எஸ். பிரகாஷ், பேரூர் கழக செயலாளர் பூண்டி கே. கலைவேந்தன்,பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர்கள் எம். என். ராஜா, வி.என்.ஆர். பன்னீர்செல்வம், பி.ஜி.ஆர். ராஜாராமன், பெ.இளவரசன், ஜி. கோபிநாத், தீ.விமல்ராஜ் போ.பத்மபிரசாத், ஜாகிர் உசேன், எழில் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஹரிஹரசுதன் தேவா, துணை அமைப்பாளர்கள் சரவணன், சந்திரசேகர், சிராஜ், மாதவன் பாலாஜி உள்ளிட்டோர முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்தும் வந்திருந்த பூப்பந்தாட்ட அணிகள் மோதிய இந்த போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பைகளை ஒன்றிய குழு தலைவரும் ஒன்றிய செயலாளருமான புலிவலம் ஏ. தேவா வழங்கினார்.

போட்டியில் முதலாவதாக வந்த அணிக்கு ரூபாய் 15,000 ரொக்க பரிசும், இரண்டாவதாக அந்த அணிக்கு ரூபாய் 12000, ரொக்க பரிசும் மூன்றாவதாக வந்த அணிக்கு ரூபாய் 8000 ரொக்கப்பரிசும், நான்காவது இடம்பெற்ற அணிக்கு ரூபாய் 6000 ரொக்க பரிசும் வழங்கப்பட்டன. முதல் நான்கு இடங்களை பிடித்த இந்த அணிகளுக்கு விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் வெற்றி கோப்பைகளும் வழங்கப்பட்டன.

திருவாரூர் நாகை பிரதான சாலையில் உள்விளையாட்டு அரங்கில்ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் ஹரிஹரசுதன் தேவா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போட்டிகளுக்கான ஏற்பாடுகளை ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியினர் மாவட்டவிளையாட்டு மேம்பாட்டு அணையினருடன் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்




கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி, முத்தமிழ் நகரில் வசிக்கும் மாணவி பாக்கியலட்சுமிக்கு கல்லூரி கட்டணம் ரூ.10,000 மற்றும் அன்சர் பாஷாவிற்கு சிறுதொழில் செய்வதிற்கு 10,000 ரூபாயினை மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்கினார். மாவட்டப் பிரதிநிதி இ.சையது அலிகான் ஏற்பாட்டினை செய்திருந்தார். உடன் பகுதிப் பிரதிநிதி பி.செல்வமணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. இராயபுரம் தொகுதியில் ஃபெஞ்சல் புயல் மற்றும் கனமழையால் 53வது வட்டம், காட்பாடா 1 முதல் 3 தெருகளில் சாலைகளிலும் தேங்கி நின்ற மழை நீர் மற்றும் கழிவு நீர் வெளியேற்றிடவும் விழுந்த மரங்களை அகற்றிடவும் துறை சார்ந்த அதிகாரிகளுடன் நேரில் கள ஆய்வு மேற்கொண்டார். இவர்களுடன் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர் ஜெ.கௌரீஸ்வரன், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.